அனுப்புநர்

சா. சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி

ந.க.எண். 019373 / எப்1 /2021 நாள்.09.12.2021

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2021–2022–ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் – கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:19.11.2021.

——————

2021 – 2022 ஆம் கல்வியாண்டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் தொடர்பான பள்ளி மாணவர்களுக்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் **22.11.2021** முதல் **04.12.2021** வரையிலான நாட்களில் EMIS தளத்தில் தங்கள் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பார்வையில் காணும் செயல்முறைகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

தற்போது சில பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பணியினை மேற்கொள்வதற்கு கூடுதல் காலஅவகாசம் கோரியதால், EMIS தளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தங்கள் செய்யும் பணியினை மேற்கொள்ள **20.12.2021 வரை கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணிகளை EMIS தளத்தில் மேற்கொள்ள இதுவே கடைசி வாய்ப்பாகும்.**

எனவே, முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் மேற்குறிப்பிட்ட விவரத்தினை தெரிவித்து, EMIS தளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, திருத்தங்களை மேற்கொள்ளும் பணியினை **20.12.2021–க்குள்** நிறைவு செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்